# தமிழ் முறைத் திருமணம்



முதுமுனைவர்
இரா. இளங்குமரனார்

# தமிழ் முறைத் திருமணம்

முதுமுனைவர் **இரா. இளங்குமரனார்**

**திருவள்ளுவர் தவச்சாலை**
திருவளர்குடி (அல்லூர்),
திருச்சி மாவட்டம் - 620 101.
தொலைப்பேசி : 2685328

# நூற்குறிப்பு


| | |
|---|---|
| நூற்பெயர் | **தமிழ் முறைத் திருமணம்** |
| ஆசிரியர் | இரா. இளங்குமரனார் |
| மொழி | தமிழ் |
| பொருள் | வாழ்வியல் |
| முதற் பதிப்பு | முதற்பதிப்பு : சனவரி - 2014 |
| பக்கம் | iv + 24 = 28 |
| எழுத்து | 13 புள்ளி |
| தாள் | 13.7 வெள்ளைத் தாள் |
| அளவு | 1/8 |
| படிகள் | 1200 |
| விலை | உருபா : 20/- |
| உரிமை | ஆசிரியர்க்கு |
| வெளியீடு | திருவள்ளுவர் தவச்சாலை,<br>அல்லூர் - 620 101,<br>திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| நூலாக்கம் | "தி பிரிண்டிங்கு அவுசு"<br>திருச்சிராப்பள்ளி - 23 |

நூல் கிடைக்குமிடம்:

- **திருவள்ளுவர் தவச்சாலை**
  அல்லூர் 620 101, திருச்சிராப்பள்ளி மாவட்டம்,
  தொலைப்பேசி எண் : 0431 - 2685328

# நூல்வரவு

திருமணம் முதலிய குடும்பச் சடங்குகளைத் தமிழ் முறையில் நடத்துவது பற்றித் 'தமிழ் நெறிக் கரணங்கள்' என்னும் பெயரிய நூல் என்னால் வெளியிடப்பட்டது.

திருமணப் பரிசு - மங்கல மனையறம் ஆகிய வாழ்த்து, வாழ்வியல் நூல்களும் - வெளியிடப்பட்டன. பலப்பல பதிப்புகளும் கண்டன. பிறரும் உரிமை பெற்றுப் பதிப்பிக்கவும் செய்தனர். திருமணம் பற்றியே விளக்கமாக இந்நூல் வெளிவருகின்றது. ஏனெனில் "நீங்கள் செய்யும் திருமண முறை எத்தகையது" எனக் கேட்பார்க்கு, இச் சுவடி விளக்கம் தருமே என்னும் ஆர்வத்தால் எழுதி வெளியிடப்படுகின்றதாம்! இதனைப் பயில்வார், தாமே "தமிழ் முறைத் திருமணம்" நடத்த முடியும் என்பது தெளிவு. இச்சுவடி நிறைவேற உதவிய பெருமக்கள் இருவர். இருவரும்,

**"தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்**
**அம்மா அரிவை முயக்கு"**

என்னும் முப்பால் போற்றி வாழும் முழுமையர்.

ஒருவர் மருத்துவர்: ஒருவர் இந்திய ஆட்சிப் பணியர். இருவரும் தமிழ் ஊற்றமும் பற்றும் உலையா உழைப்பால், உயர்மையும், உயர்மை போலத் தொண்டும் கொண்டவர். நாவன்மையும் எழுத்துவன்மையும் ஒருங்கே உடையவர்.

முன்னவர் கருவூர்க்கு ஒளியூட்டித் தமிழ் ஒளியும் பெருக்கும் கண்மருத்துவர் இரமேசர் (பரமேசுவரர்); திருக்குறள் வனப்போவிய நூல் படைப்பர்.

பின்னவர் சிவ. முத்துக்குமரர். தமிழாக வாழும் அறிஞர் ஆ.வே. இராமசுவாமி அவர்கள் மாணவர்; இனிய என் தோழமையர்; "என்றும் பணியுமாம் பெருமை" என்பதற்கு இலக்கியமானவர்; தமிழ் வழியே ஆட்சிப் பணித் தேர்வு எழுதி உயர்வாக வென்று உயரிய பதவியில் இருப்பவர்.

முன்னவர் புதுமனைத் திறப்பு விழாவைக் **கருவூரில்.** எளியேன் செய்தேன். எடுத்துக் காட்டாம் விழாவாக இருந்தது. அறக் கொடை புரிந்தார்.

பின்னவர் **ஆற்றூரில்** புதுமனை எடுத்தார். அதன் நிறைவுக் கொடை நேரில் வந்து வழங்கினார். மங்கலமனைப் புகவுக் கொடைக்கு ஏற்ற வெளியீடு, 'மங்கல விழா' வை நிகழ்த்து முறை நூல் என வெளியிடுவது இஃதாம். இருவர்க்கும் இருவர்தம் இனிய குடும்பத்தார்க்கும் நெஞ்சார்ந்த நன்றியென்.

இதனை வழக்கம்போல் மெய்ப்புப் பார்த்தவர், இம்முறைத் திருமணம் பலரும் பாராட்ட நிகழ்த்திவரும் முனைவர் திருமிகு. **பி.தமிழகனார்.** அவர்க்கு நெஞ்சார்ந்த நன்றியென். அருமையாக அச்சிட்டு வழங்கும் திருச்சிராப்பள்ளி அச்சுக் குழுமத்தாருக்கும் நனி நன்றி.

இன்ப அன்புடன்
**இரா. இளங்குமரன்**

# தமிழ் முறைத் திருமணம்

காலக் குறிப்பு :

**30.01.1930** என் பிறந்த நாள்.

**08.04.1946** யான் ஆசிரியன் ஆகிய நாள்

**11.09.1946** என் திருமண நாள்.

## என் திருமணம்

திருமண உறுதி நிகழ்ந்தது. வந்தவர்களுக்கு விருந்தளிக்கப்பட்டது. இரவு 9 மணி அளவில் திருமண நிகழ்வு தொடங்கியது.

அறுகாலி (பெஞ்சு) ஒன்று; அதன் மேல் சமக்காளம்; அதன் மேல் கிழக்கு நோக்கி மணமக்களாகிய எங்களை அமரச் செய்தனர். எங்கள் மணம் கைந்நூலாடை (கதர்) மணம்.

மணமகளார்க்குச் சீலையும் சட்டையும் 2 3/4 உருபா. எனக்கு வேட்டியும் துண்டும் 2 1/4 உருபா. மாலையாக நூற்சிட்டங்கள் இரண்டு. மாற்று மாலையாக மல்லிகை மாலை இரண்டு. இவ்வளவே.

நடத்தியவர் எவர்? **பொதுக் கடமை புரிந்தே பழகிப் போகிய மகளிர்!**

**கெட்டி மேளம்? - மகளிர் குரவை!**

**வாழ்த்து? - அத்தாய்மார் வாழ்த்திய வாழ்த்து!**

கால் மணி நேரச் சடங்கு!

திருமண நிறைவில் வந்திருந்த அனைவருக்கும் வெற்றிலை பாக்கு வழங்கல். முன்னே உண்ணாதவர் உண்ணல். மொய் வழங்குதல்! அம்மிக்கல் மிதி இல்லை! அருந்ததி காட்டல் இல்லை! எரிவளர்த்தல் இல்லை! "காசிக்குப் போகிறேன்" எனக் கைக்குடையோடு மணமகன் நடையில்லை! 'போக வேண்டா! போக வேண்டா!' என மணமகள் தந்தை ஓடவில்லை! அயன் மொழி மந்திரம் இல்லை! இவற்றைக்

கண்ணேரில் கண்ட மெய்யறிவு எனக்கு மட்டுமா? இல்லை! இல்லை! **எங்கள் ஊரில் நிகழ்ந்த எவர் மணமாக இருப்பினும் இப்படி இருப்பதை அன்றி வேறுவழியில் நடந்தது இல்லை!** சீர்திருத்த மணம், பகுத்தறிவு மணம், பதிவு மணம் என்பவை கால் கொண்ட பின்னை வழக்கா இது? இல்லை வழிவழியாக வந்த வழக்கு! அவ்வழக்கு இன்றுவரை போற்றப்பட்டு வருதல் பெருமித மாகின்றது.

**தமிழ் நெறித் திருமணம்:**

என் மணநிகழ்வும் அதன் செயல்முறைச் சீர்மையும், அயன்மை புகா அருமையும், மகளிர்க்குத் தரும் முதன்மையும் என்னை விட்டு அகலாமல் நிலை பெற்ற பேறே, திருமணச்சடங்கு முதலாம் சடங்குகள் அனைத்தும் தமிழ் நெறியில் நடத்தி மீட்டெடுப்புச் செய்ய வேண்டும் என்னும் உந்துதலாய் என் இருபதாம் அகவையிலேயே திருக்குறள் ஓதித் திருமணம் நடத்துதலாகியது. அப்பொழுதே புலமைத் தேர்வு முடித்துவிட்டமையால், அகநானூற்றில் வரும் 86 ஆம்பாடல் என் நெஞ்சைப் பற்றிக் கொண்டு ஒளிவழி காட்டியது. 136 ஆம் பாடலும் உதவியது.

தமிழர் தமிழராக வாழ்ந்த நாளில், தமிழே சடங்கு மொழியாக இருந்தமையும், அதனைப் பெண்களே நிகழ்த்தியமையும், அவர்களிடம் இருந்து ஆண்கள் அவ்வழக்கைப் பறித்துக் கொண்டமையும், அதன்பின் அவர்களிடமிருந்து அயலார் பறித்துக் கொண்டமையும், அதனால் தமிழர் நெறி ஒழிக்கப்பட்டதை மீட்டெடுக்கவும் இயலா நிலைக்கு ஆட்பட்டமையும், எண்ணி எண்ணி என்னை முழுதுற ஒப்படைத்த ஒப்படைப்பே நாலாயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட எண்ணிக்கையில் என் அறுபத்தைந்து ஆண்டுத் தொடர் பணியாகச் செய்யப்பட்டதாம்!

இத்தனை திருமணங்களை - இவற்றொடு, புதுமனை புகுதலை - மணிவிழாவை - படத்திறப்பை - எளிதாக - இயல்பாக - நடத்த வாய்த்ததா? எத்தனை தடைகள்? எத்தனை எதிர்ப்புகள்? எத்தனை இழிமைகள்?

**மீட்டெடுப்பு**

என் இனத்தை மீட்டெடுப்பேன் என்பவனுக்கு இருக்க வேண்டிய மூவியல்புகளை வள்ளுவம் கூறும். அவ்வள்ளுவம் என்ன?

காலம் பாராதே!
சோம்பிக் கிடவாதே!
மானத்தை எண்ணாதே!

என்பவை.

**"குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து**
**மானம் கருதக் கெடும்."**

என்பது அது.

தந்தை பெரியார் இதனையே தம் வழிகாட்டிக் குறளாகக் கொண்டமை அவர்சொன்னதும் நாடறிந்ததுமாம்!

**வெற்றி மூலம்**

அடிப்படையாக ஒரு கொள்கையைக் கொண்டேன். நாம் செய்ய வேண்டும் சடங்கைச் செப்பமாகச் செய்நேர்த்தியுடன் செய்ய வேண்டும். **பிறர் செய்முறையைப் பற்றிப் பேசுதல் ஆகாது. வாழ்த்தும் ஒன்றை அன்றி, மற்றை எதுவும் சடங்குகளில் கொள்ளுதல் ஆகாது** என்பதேயாம்! **இக் கொள்கையே வெற்றி மூலம் என்பதை மெய்யாகவே யான் உணர்கிறேன்.**

வேதிய மணத்தைக் கண்டு கண்டு, இதுவே நம் வழியெனக் கொண்டு நடத்தியவர்களுக்கு, இயல்பான -

முறையான - தமிழ்நெறி புதுவதாக - புரட்சியாகப் - புலப்பட்டது. சிந்திக்கும் பிறவியர்க்கு மட்டுமே, "இது தமிழில் செய்யப்படுவதால் புரிகிறது." என்று தோற்றம் தந்தது. இத் தோற்றமே தமிழ்ப் பற்றுடையார் ஏற்றுக் கொள்ளத் தூண்டிற்று! "புரியாத புகைபோடும் முறையினும் இம்முறை நன்முறையே" என அவர்கள் நாடியைத் தொட்டமையால், தமிழ்வழித் திருமணம் தம்குடும்பங்களில் நிகழ்த்த இசைந்ததுடன், தம்மைச் சார்ந்தார் - தம் தொடர்புடையார் என்பாரையும் இம்முறையில் மணங்கொள்ளத் தூண்டினர். அப்படித் தூண்டினாரும் புறக்கணிக்கப்பட்டனர். அந்நிலையில் தமிழ்முறை மணத்தில் நின்றாரும், நில்லாமல் சென்றாரும் உண்டு. ஒருவீட்டார் இசைந்து மறுவீட்டார் புறக்கணித்து வேதிய முறையே போற்றியவர்களும் உண்டு. மெல்ல மெல்ல வளரத் தொடங்கியது, தமிழ்முறைத் திருமணம். சிலப்பதிகாரக் காலத்திலேயே "மாமுது பார்ப்பான் மறைவழிகாட்ட " மணம் நிகழ்தலாயிற்று. இமயத்துக் கல்கொண்டு கண்ணகிக்குக் கோயில் எடுத்த செங்குட்டுவனே பார்ப்பார்ப்பால் பட்டுப் போனமையை இளங்கோவடிகள்,

"வேள்விச் சாலையுள் வேந்தன்
பெயர்ந்தபின் யானும் சென்றேன்"

எனும் தொடரால் காட்டுகிறார். அவர் முத்தமிழ் வல்ல தமிழரே எனினும் சமண சமயத்தார்!

"இராச சூய யாகம் வேட்ட பெருநற் கிள்ளி"

"பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி" என்னும் பெயர்கள் வழியே அறியப் பெறவில்லையா, வேள்வி விளையாடல்! "வேந்தன் எப்படி; மாந்தர் அப்படி" என்ற நிலையில் மீட்டெடுப்பு எளிதா?

பின்னே தமிழகம் வந்து பற்றிய பல்லவ - மராத்திய - தெலுங்க - ஆட்சியர் ஆரியத்திற்கு முற்றாக அடிமைப்பட்டுப்

போயவர். ஆங்கிலவர் மேலையாரியர். கீழை ஆரியர்க்கு மாறானவர் ஆகாதவர். இந்நிலையில் தமிழ் நெறிக்கு இசைவார் அரியராம்! ஆயினும், மெல்ல மெல்லப் பாயும் நீர் கல்லிலும் ஏறும் என்பது போல் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடக்க, திரு.வி.க. கி.ஆ.பெ. முதலிய சிலர் வழிகாட்டினர். கி.இராமலிங்கனார் சிவநெறியில் மணம் புரிவித்தார். குருக்களைக் கொண்டு சைவ வேளாளர் கரணம் நடத்தினர். வள்ளலார் வழியர் அம்முறையே செம்முறை என நடத்தினர். பெரியார் வழியர் சீர்திருத்தத் திருமணம் - சுயமரியாதைத் திருமணம் - என நடத்தினர். இச்சூழல் தமிழ்முறைத் திருமணம் நிகழ ஓரளவு உதவிற்று. மற்றொன்றும் சுட்ட வேண்டும்: வழிவழியே நடைபெற்ற தமிழ்முறைத் திருமணம் மட்டுமே கொண்ட குடிவழியரும் உண்டு என்பது.

திருமணக் கரணம் நடத்துபவர், தக்கவர் என்றும், அவர்முறை செம்முறை என்றும் மக்கள் மனத்தில் பதிதல் வேண்டும். கண்மூடித் தனத்திற்கு மூலமுதல் நம்பிக்கை என்பதுபோல், மீட்டெடுப்புக்கும் நம்பிக்கை முதல் வேண்டும். இவர் நடத்தத் தக்கார்; இவர் மதிக்கத் தக்கார் என்னும் எண்ணம் மக்கள் மனத்தில் பதிவாகி விட்டால், அவையே நீரும் உரமுமாய் மணப்பயிரை வளர்த்துப் பயன் செய்யும்.

விழாக்கள் சடங்குகள் ஆகியவற்றில் பெருகக் கூடுவார் எவர்? மகளிர்!

சடங்கு நடத்துதல், விளக்கு வழிபாடு, இறை நம்பிக்கை இவற்றில் பெரிதும் ஈடுபடுபவர் எவர்? மகளிர்!

வருங்கால மக்கள் ஆகிய இளையவர்கள் எவர் வழியில் செல்லும் நிலை உள்ளது? இவற்றை எண்ணினால் 'மகளிர்' என்பது புலப்படும். அம் மகளிர் ஆர்வமாய்ச் செய்யும் சடங்குகளுக்கு முன்னிடம் தரவேண்டும். சடங்குகளில்

அவர்கள் பங்களிப்பு தக்கவகையில் இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்தால் அவர்கள் ஒத்துழைப்புக் கிட்டும். அவர்களை மேடை ஏற்றாமல் சடங்கு செய்ய விடாமல் தடுத்தால், அவர்களே முட்டுக்கட்டை ஆகிவிடுவார்கள். அகநானூற்றில்,

**"புதல்வர்ப் பயந்த திதலை அவ் வயிற்று**
**வாலிழை மகளிர் நால்வர் கூடிக்**
**கற்பினின் வழாஅ நற்பல உதவிப்**
**பெற்றோன் பெட்கும் பிணையை யாகு"**

என்று மகளிர் சடங்கு செய்ததையும், வாழ்த்தியதையும் மறவாது நினைந்து போற்ற வேண்டும். அதற்கு நாம் செய்ய வேண்டுவ தென்ன?

மகளிர் திருமண விழாவில் மட்டுமன்றிக் குடும்ப விழாக்கள் அனைத்திலும் முந்துநின்று பங்கு கொள்ள விழைதலை விலக்குதல் ஆகாது. அரசாணிக் கால் நடவா, விளக்கு ஏற்றவா, முளைப்பாலிகை வைக்கவா, வழி வழிக் குடும்பச் சடங்கு முறைகளைச் செய்யவா, தடையின்றி வழிவிட வேண்டும்.

**தாய்மாமன்** உரிமை பேருரிமை; அவர்கள் உரிமையைத் தட்டிப்பறித்தல் ஆகாது. அவர்களை மரபுப்படி அவர்கள் மருமக்களுக்கு மாலை சூட்ட அழைத்துப் பெருமைப்படுத்த வேண்டும்.

மணமக்களின் குடும்பத்தில் மூத்த பெருமக்கள் தாத்தா பாட்டியர் இருந்தால் அவர்களை மேடையேற்றல் அல்லது முன்னிலையில் இடம் தரல் வேண்டும். அவர்களே பழநாளில் திருமணக் கொடைவிழா நடத்திய பெருமையர். அதனாலேயே **'தாதா'** (கொடையாளர்) எனப்பட்டவர். அவர் உரிமையைத் தவிர்த்தல் ஆகாது. மணமக்கள் அவர்களை வணங்கி அவர்கள் வாழ்த்துப் பெறுதல் குடும்ப மகிழ்வு

மட்டுமன்று; முதியோரைப் பேணும் முறைமையைத் திருமண விழாவுக்கு வந்தவர்கள் அறியத்தக்க வாய்ப்புமாம்.

ஒரு குடும்பப் பெற்றோரிலேயே தந்தை தமிழ்மணமுறையை ஏற்க, தாய் புறக்கணித்தல் மட்டுமன்றி எதிர்த்தலும் உண்டு.

மணமகன் குடும்பம் மணமகள் குடும்பம் இரண்டனுள் ஒன்று வலுப்பிடியாக ஏற்க மறுத்தல் உண்டு.

இரண்டு குடும்பமும் இசைந்தாலும் வேதநெறியே நெறியெனக் கொண்டுவிட்ட உறவினர், ஆம் - குருதித் தொடர்பு உறவினர் - "நம் வழக்கத்தை மாற்றலாமா, தீவளர்க்காமல் மந்திரம் ஓதாமல் திருமணமா?" எனத் தட்டுதலும் முட்டுதலும் உண்டு. மனங்கலந்துவிட்ட திருமணத்திற்கு - காதல் திருமணத்திற்கு - பெறறோர் உடன்படாது ஒதுங்கல் - ஒதுக்கல் உண்டு.

வேதியமற்ற திருமணத்தால், "மழைபெய்யாது; மகப்பேறு வாயாது; நோய்நொடி பெருகும்" என்பன போல அடுக்கிக் கூறித் தடுக்கும் 'அவாளும் இவாளும்' ஊரூர்க்கும் உண்டு.

இந்நிலையில் திருமணம் நடத்துவார்க்கு மிகமிகப் பொறுப்பும் அமைந்த சால்பும் முறையறிந்து முன்னறிவோடும் நடந்து வெற்றி கொள்ளும் திறமும் வேண்டும். மண அரங்கிலே, பந்தியிலே வரவேற்பு வழியனுப்பல்களிலே கூடச் சிக்கலை ஏற்படுத்துவதே தம்மை அடையாளம் எனக் காட்டிக் கொள்ளலாக எண்ணுவாரை அமைவுபடுத்தும் அருமை பெரிதாம்.

விராலிமலையை அடுத்ததொரு சிற்றூர். மணமகன் ஆர்வத்தால் தமிழ் நெறித் திருமணம் நிகழ்த்த என்னை நாள்கேட்டு ஏற்பாடு செய்துவிட்டார். அவரை உறவினரும் ஊர்ப் பெரியவர்களும், "ஊர்க்கே தீமை; நோயாம்;

மழைபெய்யாது; குடும்பத்திற்கும் கேடு" எனப் பலப்பல சொல்ல ஆர்வமிக்க அவர் அசைவுற்றார்!

"வேதிய மணம் செய்தாருள் வெள்ளைச்சீலை கட்டினார் இலரா? தாரம் இழந்தார் இலரா? மகப்பேறு இல்லார் இலரா? நாடே மழையின்றியும் தொற்று நோய் பரவியும் துயர்ப்பட வில்லையா?"

"எண்ணிப்பாருங்கள் ; உங்கள் மனம் உறுதிப்பட்டால் செய்யுங்கள்" என்றேன்.

"எனக்கு அச்சமில்லை; மாற்றமில்லை; பெற்றவர்களுக்குக் கொஞ்சம் தயக்கம்; சொல்லிச் சீராக்குகிறேன்" என்றார். "உங்களிடம் யார்யார் மாறாகப் பேசினார்களோ அவர்களை யெல்லாம் கட்டாயம் மறவாமல் திருமணத்திற்கு அழையுங்கள். திருமண முறையைக் காணச் சொல்லுங்கள். ஊரை வரவேற்று இன்னார் திருமணம் நிகழ்த்துவார் எனச் சொல்லி என்னிடம் மணப் பொறுப்பை ஒப்படைத்துவிடுங்கள்; நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றேன். அவ்வாறே செய்தார்.

**திருமண நிகழ்வைத் தொடங்கினேன்; உரிய வாழ்த்து வரவேற்புடன் திருமணச் சடங்கை அரைமணி நேரத்துள் முடித்தேன்; திருமணம் முடித்த அளவில் பிடித்த மழை, கொட்டோ கொட்டெனக் கொட்ட, பந்தல் தாங்க வில்லை; பக்கத்து நீரும் பந்தலுள் வர, உணவாக்கியதை உரிய பந்தலுள் உண்ணமுடியாமல் அண்டை அயல் வீடுகளில் அமரவைத்து விருந்து செய்யும் நிலைமை ஆயது. திருமண முறையை எதிர்த்தவர் அனைவரும் என்னைச் சூழ்ந்து கொண்டு, "இப்படித் திருமணம் நிகழும் என்றால், நாங்கள் மாறு பேசியிருக்க மாட்டோம்" என்றனர். "உங்கள் தெளிவுக்கு நன்றி; நீங்கள் நினைத்தால் ஊரில் நிகழும் சடங்குகளை எல்லாம் நம் மொழிச் சடங்கால் மீட்டெடுக்கலாம்" என்றேன்.**

ஓராண்டு தாண்டி அடுத்த ஆண்டிலே துறையூரில் செங்கை செந்தமிழ்க் கிழார் ஏற்பாட்டில் தொடர் பொழிவு செய்து கொண்டிருந்தேன். அம் மணமக்கள் மகவொடு வந்து நிகழ்வில் கலந்து கொண்டு மகவுக்குப் பெயர் சூட்ட வேண்டினர். ஊரவர் சிலரும் உறவினர் சிலரும் உடன் வந்தனர். அது பொழிவொடு பெயர் சூட்டுவிழாக் கொண்டாட்டமாகவும் அமைந்து மகிழ்வித்தது.

தில்லிப் பெண்ணார்; கோவை மணமகனார்; அவர் தமிழ் நெறியில் மணம் நடாத்த ஆர்வ முற்றார். 'எழுகதிர்' **'அருகோ'** அவர்கள் வழிகாட்டலில் என்னை அணுகினார்; மணம் நிகழ்த்த இசைந்தேன். திருமணம் நிகழ்ந்தது கருவூரில். மணமகன் வீட்டார் 'தமிழ்முறைத் திருமணம்' என அச்சிட்டு இருந்தும், என்பெயரிட்டு இருந்தும், மணமகள் வீட்டார் அயன்மண ஆர்வலராய் உள்ளேற்பாடும் செய்துள்ளனர் என்பதை மண விழாவுக்குச் சற்று முன்னர் அறிந்தேன்.

சடங்கு நடத்த ஏற்பாடு செய்யப்பட்ட பார்ப்பனர் என்னிடம் வந்தார். "பெண்வீட்டார் என்னைத் திருமணம் நடத்தக் கேட்டுள்ளனர். அதனால் வந்தேன்; நான் நடத்துகிறேன். அதன்பின் வாழ்த்துங்கள்" என்றார். நின்று கொண்டு பேசிய அவரை, அடுத்த இருக்கையில் அமரச் செய்து. "அழைப்பிதழ் இருக்கிறதா? அழைப்பிதழைப் படித்தீரா? இதோ அழைப்பு. என்பெயர் உள்ளதா? உம் பெயர் உள்ளதா? மணமகள் வீட்டார் என்றால், மணமகன் இசைந்தாரா? அவரை இல்லாமல் எப்படி மணம் நடத்துவீர்?" என்று வினவினேன். யான் நடத்தும் மண விழா நிகழ்முறையை அறிந்த தஞ்சைப் பெருமகனார் ஒருவர் மணமகள் வீட்டாரிடம் பேசினார். "ஐயா அவர்களுக்கு நாள்வாய்த்து வந்ததே பெரிது. அதனைப் போற்றிக் கொள்ளாமல் வேறு ஏற்பாடு செய்தீர்களே, வாருங்கள் மணமகனைக் கேட்போம்" என்றார். மணமகன், "ஐயா தமிழ் முறையில் நடத்தும் திருமணமே

வேண்டும். அதனை மறுத்தால் மணமேடைக்கு யான் வரமாட்டேன்'' என்று உறுதியாகச் சொன்னார். நான் பார்ப்பனரிடம், ''நான் திருமணம் நடத்துவேன்; அதைப்பார்த்துக் கொண்டிரும். திருமணம் முடிந்தபின் நீர் வாங்க வேண்டியதை வாங்கிக் கொண்டு போகலாம். அதற்கு நான் தடையாக இரேன். இன்னும் ஒன்று; நீரே தமிழ் முறைத் திருமணம் நடத்தினால், நானே உமக்குப் பரப்பாளனாக இருப்பேன்'' என்றேன். அவர் திகைப்படைந்தார். அமர்ந்திருந்து பார்வையாளரானார்.

மணம் நிறைவுற்றது; அவரை அணுகினேன்; ''நன்னாத்தான் நடத்தறேள்'' என்றார். ''இம்முறையை நீர் செய்யலாமே'' என்றேன். ''நான் செய்தாலும், எங்களவாள் என்னை ஒதுக்கிவிடுவாள்'' என்றார். ''நல்லது; நாங்கள் உங்களை ஒதுக்கி வைக்காவிட்டால் - சிந்தனையற்ற மூடம் நாங்களே; நாங்களே பார்ப்பனிய அடிமை என்பது தெளிவாகிறது'' என்றேன்.

நாம் சிந்தித்துத் திருந்தும் வரை, அவர்கள் ஆட்டம் நில்லாது! அவராகவா வந்தார்? அழைத்துத் தானே வந்தார்? நாம் மானம் பேசுவோம்! மானக் கேடராக வாழ்வதில் முதல்வரிசையில் நிற்போம்! அவர்களைக் குறை சொல்லி என்ன பயன்? ஏமாறி உள்ளவரை, ஏமாற்றிக்கு ஏகப்பட்ட வாய்ப்புத்தானே! நரி என்றாவது சூழ்ச்சியை விடுமா? ஆட்டு மந்தையாய் நாம் இருக்கும் வரை நரியாட்டம் நிற்கவே நிற்காது!

கட்சித் தலைவர் ஒருவர் ஒரு திருமணத்திற்குத் தலைவரெனக் கண்டேன். கட்சியினர் எந்த இடம் வந்தாலும் தங்கள் கட்சியை - கட்சித் தலைமையைச் சுட்டி நீட்டாமல் விடார்! அவ்வாறில்லாத விரல் விட்டு எண்ணத்தக்க சிலரையும் யான் அறிவேன். அவர்கள் மாந்தநேயம் மிக்குக் கட்சியை மறந்து மணமேடைக்கு வருபவர்கள்!

இக்கட்சித் தலைவர், “யான் இன்னொரு திருமணத்திற்கு செல்ல வேண்டும். மாலை மாற்றுங்கள்; நான் வாழ்த்தி விட்டுப் புறப்படுகிறேன்” என்றார். “முறைப்படி திருமணம் செய்யவே வந்தேன். மாலை மாற்ற வேண்டுமானால் நீங்களே செய்யுங்கள், நான் உங்களுக்கு முன்னரே மேடையை விட்டு இறங்கிவிடுவேன்” என்று கூறி இறங்கி விட்டேன்.

தமிழ் முறை போற்றாதார் எவராயின் என்ன? எப்பதவியர் என்றால் என்ன? **குறிக்கோளிலா வாழ்வர்க்குக் குறிக்கோளுடையார் ஒத்துப்போவது, கோழைத் தனத்திலும் கோழைத் தனமாம்!** இது நடை பெற்றது குழித்தலையில்.

குடந்தைசார் திருவேரகத்தில் ஒரு திருமணம். நெஞ்சம் கலந்த திருமணம்; மணமகன் பெற்றோர் இருந்தனர்; மணமகள் பெற்றோர் வரவில்லை; ஏனென்று வினவினேன்; சாதிமையில் உயர்வு தாழ்வு கருதியது, சாதிப்பிடிப்பும் சார்பும்! **பெற்றோர் இல்லாமல் திருமணத்தை நான் நடத்துதல் முறையன்று:** அவர்களும் சரி, மற்றையரும் சரி, வளர்த்து வாழவைத்தவர் இல்லாமல் நடத்தும் திருமணம் வரிசையானதா? “மணமக்கள் எண்ணவில்லை என்றாலும், மணம் நடத்துபவர் எண்ணியிருக்க வேண்டும் அல்லவா” என்று கேட்கவே செய்வர். நான் பெண்ணின் பெற்றோரைப் பார்த்தே வர வேண்டும் என்று புறப்பட்டேன்.

மணமகள் தாயார் வீட்டில் இருந்தனர்; தந்தையார் வணிகர்; வழக்கம் போல் வணிக நிலையம் சென்று விட்டார். வீட்டுக்கு அழைத்துவரச் செய்தேன்; தாயும் தந்தையும் நடவாதது நடந்து விட்டதாக எண்ணிக் கண்ணீர் விட்டனர். பிள்ளைகள் வாழவேண்டும் என்பதை அன்றி வேறு என்ன உங்கள் மனத்தில் இருக்கமுடியும்? “எங்கள் இணைவே வாழ்வு” என அவர்கள் முடிவு செய்தபின் தடுத்து, அவர்கள் உள்ளம் வேறுபோக்கில் போகிவிட்டால், ஏதாவது

ஆகிவிட்டால், அப்பொழுது நம்மை நம் மனமே சுட்டெரிக்குமே; ஊர்பேசும் உலகம் பேசுமெனஎண்ணினால், பேசும் ஊர்க்கு எந்தச் சிக்கலும் வாட்டலும் இல்லை. உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் தான் "வாட்டல்" என்றேன். "நீங்கள் திருமணம் நடத்துங்கள்! உணர்ந்து வந்து நீங்கள் அழைத்ததே பெரிது!" என்றனர். வலியுறுத்திப் பயனில்லை என்பதை அறிந்து, "ஒன்று செய்யுங்கள்; திருமணம் நடத்துவேன்; நடத்தி முடிந்ததும் இங்கே அவர்களை அழைத்துக் கொண்டு வருவேன்; நீங்கள் வரவேற்க வேண்டும். வரவேற்போம் என்றால் நான் மணம் நடத்தப் போகிறேன். இல்லையென்றால் நான் இப்படியே ஊர்க்குப் போய்விடுகிறேன்" என்றேன். தந்தையார், "என் கையைப் பிடித்து நன்றாக நடத்துங்கள்; அழைத்துக் கொண்டுவாருங்கள்; வரவேற்கிறோம்" என்றார்.

புறப்படும் போதே கொண்டு சென்ற திருமங்கல நாணை அவர்கள் தொட்டு வணங்கித்தரச் செய்து வந்தேன். உரிய பொழுதில் திருமணம் முடித்து அழைத்துக் கொண்டு வந்தேன்! பிள்ளையும் அழுகை! பெற்றோரும் அழுகை! அந்த அழுகை கூட அப்பொழுது மகிழ்வை உள்ளுள் ஆக்கியது! காதலின் வலிமையை எண்ண வைத்தது! திருமணம் நடத்துவது என்பது எளிதன்று! பலரும் ஏற்றுப் போற்ற நடாத்துவது அரிய செயலேயாம்! அவ்வாறு வென்றெடுக்கும் வீறுள்ளமும், அமைந்த சால்பும், பொறுப்பு ஏற்பார்க்கு இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்தவே இவை கூறப்பட்டனவாம்.

இனிக் குழந்தைகள் ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கும்; பெண்கள் பேசிக்கொண்டே இருப்பார்கள்; ஆண்கள் ஆங்காங்கே நின்று கொண்டு உரையாடல் நடத்துவர்; மாப்பிள்ளையின் தோழர்களும், கலகலப்பில் இருப்பர்; பெற்றோர்கள் எல்லாம் நன்றாக நடக்க வேண்டும் என்ற பரபரப்பில் இருப்பர்!

உரிய பொழுதில் தாலி கட்ட வேண்டும் என்பர். ஆனால் மாப்பிள்ளை பெண்ணை உரிய பொழுதில் மேடைக்கு அழைத்துவர மாட்டார்! குறுகிய பொழுது இருக்கும் போது முயன்று மேடைக்கு அழைத்து வந்தாலும், நம் படப்பிடிப்புக் கலைவல்லார் நடக்க விடமாட்டார்! "இங்கே திரும்பு, அங்கே திரும்பு, இப்படிப் பார், அப்படிப் பார்" என ஆணையராகவே ஆட்சி செய்வர்! எப்பொழுது தாலி கட்டுவர், இலையில் கை வைப்போம் என்னும் எதிர்பார்ப்பில் தளிர்ப்போர்க்கும் குறைவிராது. இதுதான் வேளையென மேடையில் ஏற இடம் இல்லாமல் ஆணும் பெண்ணும் குழந்தைகளும் நின்றுவிடுவர்.

மாலையும் மற்றைப் பொருள்களும் மணமகன் அறையில் வைத்து விட்டு மேடைக்கு வந்துவிடுவர். கேட்டுக் கேட்டுப் பெற வேண்டும். இவ்வளவு பாடுகளுக்கும் இடையே பாராட்டும் வகையில் திருமணம் நடத்துவ தென்றால் அதனைச் செய்வது செயற்கரிய செயல் அல்லவா!

வரவேற்கிறார் - வரவேற்கிறார்! கால்மணி நேரமே இருக்கிறது! பத்து நிமையங்கள் எடுத்துக் கொள்கிறார்! அப்படி ஆர்வம், ஒலிபெருக்கி முன் நிற்கும் போது! அவரைத் தடுக்கமுடியுமா?

தலைவர் முன்னிலையரும் முண்டியடித்து நின்றால் முடிவ தெப்படி?

வரவேற்பைக் கருதாமலே, இன்னார் திருமணம் நடத்துவார் என்று சொல்வதை எதிர்பாராமலே, "பெருமக்களே உரிய பொழுதில் திருமணத்தை முடிக்க வேண்டும்" என்று யானே வரவேற்கிறேன் என்று சொல்லித் தொடங்கி, ஐந்தே மணித் துளிக்குள் திருமங்கல நாண்பூட்டி அதன்பின் வாழ்த்திய நிகழ்வுகளும் உண்டு.

பொழுதே இராது; மணமக்கள் உறுதி மொழி படித்துக் கையொப்பம் இடவேண்டும் என ஒருவர் வந்து நிற்பார்!

நெற்றிப்பட்டம் கட்ட வேண்டும் என்று ஒருவர் வரிசை போடுவர்!

அன்பளிப்பை வழங்கிவிட்டு அடுத்த திருமணத்திற்குச் செல்ல ஆர்வலர் எழுவர்!

ஊடே 'கோயில் மரியாதை' 'பெரியவர் ஆசி' எனக் குறுக்கிடும்!

"பாவிமகன் படும் துயரம் பார்க்கொணாதே" என்றபடி திருமணம் நடத்துபவர் நிலை இருக்கும்!

இவை எல்லாம் இட்டுச் சொல்வன அல்ல!

என் பட்டறிவில் பதிந்தவை!

இவற்றையெல்லாம் வென்றெடுத்து ஏறத்தாழ நாலாயிரத்தைந் நூற்றுக்கு மேல் திருமணங்கள் நடத்தினேன் என்றால் ஓர் ஏக்கழுத்தமே உண்டாகின்றது!

திருமணத்தைக் கூர்ந்து கேட்ட - கண்ட - உணர்வாளர் - கொண்ட மகிழ்வு, கொள்ளையோ கொள்ளை எனும் போது 'அன்னை வாழ்க' என வாழ்த்தவே தோன்றும்!

இந்த முறையில் திருமணம் செய்வதே திருமணம்! ஒவ்வொன்றும் புரிகிறது. ஒவ்வொரு செயலும் விளக்கமாகிறது; சடங்கே வாழ்வியல் விளக்க மாகிவிடுகிறது; வீடு தொட்டு உலகம் வரை விழாவில் இடம் பெறுகிறது. விழாவுக்கு வந்தோர் அனைவரும் விழாவில் பங்கு கொண்டு வாழ்த்திய நிறைவு ஏற்படுகிறது எனப் பாராட்டுவர். அங்கேயே தங்கள் குடும்பத் திருமணத்திற்கு இசைவும் கேட்பர்.

இந்தத் திருமணத்தைப் பார்த்தபின் இப்படியோர் திருமணம் செய்ய வேண்டும் என்று எண்ணம் எனக்கு உண்டாகின்றது என்றார் ஒருவர்!

உங்களுக்குத் திருமணம் என்பதை மாற்றி, உங்கள் பிள்ளைகளுக்கு, பேரப்பிள்ளைகளுக்கு என்று சொல்லுங்கள் என்று நகைத்தேன்! அவரும் நகைத்தார்!

யானே வந்து திருமணம் நடத்த வேண்டுமென்று பெற்றோர்களிடம் போராடி ஆறுமாதம் காத்திருந்து மணமுடித்தார் உளர்!

திருமண நாளை மாற்றி வைத்து, எனக்கு வாய்த்த நாளில் மணமுடித்தார் உளர்!

மணம் நடத்த நாள் கேட்டு, அதன்பின் மண்டபம் பார்த்தார் உளர்!

தந்தைக்கு மணிவிழா! மகனுக்கு மணவிழா! பேர்த்திக்கும் மணவிழா! பெயர்சூட்டு விழா! என வழிவழி உரிமை கொண்டார் உளர்!

அறுநூறு வீடுகள் உள்ள ஊரில் ஏறத்தாழ நானூறு வீடுகளில் நான் திருமணம் நடத்தி வைத்த பேறு உண்டு. அஃது 'ஆர் வி' பட்டி! திருப்பரங்குன்றம் சார்ந்த ஊர்.

**திருமண உறுதி! திருமணம்! புதுமனை புகுவிழா! பெயர் சூட்டுவிழா! மணிவிழா** என ஒரே குடும்பத்தில் பத்துக்கு மேற்பட்ட விழாக்களில் பங்கு கொண்ட துண்டு!

திருமண உறவால் ஏற்பட்ட தொடர்பு "உள்ளம் விரிந்தால் உலகெலாம் சொந்தம்" என்பதைக் கல்லெழுத் தாவணம் ஆக்கியுள்ளது என்பது கண்காணும் உண்மையாம்.

இனித் திருமணமுறை பற்றிக் காணலாம். யான் தொடக்கத்தில் நடத்திய திருமணம் - குறளாய முறைத் திருமணம் - தமிழ் நெறித் திருமணம் என்பவை எல்லாம் எவர்க்கும் பொதுவாம் சால்பினவை.

இறை நம்பிக்கை உள்ளார் இல்லார்; சாதி சமயப் பற்றர், அவற்றைத் தவிர்த்தார்; குலமணம், குலமறுப்பு மணம்; காதல்

மணம் கட்டாய மணம் - என எவற்றுக்கும் முட்டி மோதாத பொதுமைச் சால்பினது யான் செய்விக்கும் தமிழ்முறைத் திருமணம். எவரையும் எதனையும் திட்டாமல், வாழ்த்துதல் பண்பே பண்பாய்க் கொண்டது அது.

இப்பொதுமைப் போக்கே வெற்றியின் மூலம் எனல் உண்மை. இச்சால்பியத்தால் எதிர்ப்பாராத் திருமணங்கள் நடத்த நேர்ந்ததுண்டு.

**தங்கவயலிலே (கோலார்) ஒரு திருமணம்**

திருமணம் செய்யக் கூடாத நாள் எனக் கணியத்தால் தள்ளப்பட்ட நாளில் - அப்படிப்பட்ட நேரத்தில், மணமகள் வெள்ளைச் சீலை சட்டை போட்டுக் கொள்ள நடைபெற்ற தி.க. திருமணம் அது! எனக்கு எந்நாளும் எப்பொழுதும் நன்னாளே! நற்பொழுதே! இன்னும் சொன்னால், எளிதில் மண்டபம் வாய்க்கும்; போக்குவரவு நெருக்கடி இராது. தாலி கட்ட - கெட்டிமேளம் கொட்ட வேலை இல்லை. இரண்டு பேரும் மாலைமாற்றிக் கொண்டாலே போதும்! குடும்பம் - வாழ்வியல் பற்றி வேண்டுமளவு பொழிவு! நான்குமணி நேரம் வாழ்வியல் - பெண்ணுரிமை - மக்கள் வளர்ப்பு - குமுகாய ஒப்பியல் எனப்பலர் உரைகள்! உண்டுவந்து அமர்ந்தனர்; மண வினை முடிந்து உண்ணச் சென்றனர்!

மாப்பிள்ளை சமயம் கிறித்தவம்; பெண் சிவனியம்! இங்கிலாந்து வாழ்வர்!

**சென்னையில்** திருமணம். இதனை நடத்தத் தக்கார் இவர் என நல்ல துறவர் - தமிழ்த் தேவாரத் திருவாசகமே வழிபாடு - எனக் கொண்ட துறவர் கூற, யான் சென்னை சென்று நடத்தினேன்! முறைமன்ற நடுவர்கள் - வழக்குரைஞர்கள் - மருத்துவர்கள் - பொறிஞர்கள் - பெரும்பெரும் பதவியர் - அவர்கள் துணையர் எனக் கூடிய வியப்புறு திருமணம்! அனைவரும் "இப்படியும்

தமிழில் நடத்த முடியுமா" எனத் தனித்தனி பாராட்ட நிகழ்ந்த அருமையது!

ஆத்திரேலியா வாழ் குடும்பம் - தஞ்சையை ஆண்ட பரம்பரையர்; **கோவை** வாழ்வினர்! முன்னையது மாப்பிள்ளை குடும்பம்; பின்னையது பெண்குடும்பம். பெண் குடும்பத் தலைவர் நல்ல தமிழ்ப் பற்றாளர்; பண்பாட்டில் சிறந்தவர்; தமிழ் முறைத் திருமணமே நிகழவேண்டும் என்னும் தமிழ்க் காதலர்! ஆத்திரேலிய மணமகன் பெற்றோர் உறவினர் தமிழறியார்! அவர்களுக்கு நாம் என்ன செய்கிறோம், சொல்கிறோம் என்பது புரிய வேண்டுமே! அதற்காக முன்னேற்பாடாக ஆங்கிலம் தமிழ் வல்ல படைப்பாள அறிஞர் ஒருவர் ஊடே ஊடே மொழி பெயர்த்து உரைக்க! பெண்ணின் குடும்பம் மட்டுமன்று! மாப்பிள்ளை குடும்பமே வியந்து பாராட்டியது!

இசுலாமிய சமய மாப்பிள்ளை! தமிழ்ப் பற்று மிக்கார்! சமய உறுதியும் உடையவர்! தமிழில் திருமணம் நிகழ்த்த அவாவினார்! அழைப்பும் அடித்தார்! தலைமை செந்தமிழ் அரிமா **சி.இலக்குவனார்!** திருமணம் நிகழ்த்துபவன் யான்! வாழ்த்துரைக்கவும் தக்கார்! சமய விதிமுறை மாறாமல் நிகழ்ந்தது! மண்ணின் மணமாகச் சிறந்தது. இது **தமிழ் மதுரையில்** நிகழ்ந்தது.

ஈரோடு, சென்னை, குமரிமுனை, குற்றாலம் முதலிய இடங்களில் இத் திருமணமுறைப் பயிற்சி தரப்பெற்றது. ஆங்காங்கு அரிய தொண்டர்கள் - பேராசிரியப் பெருமக்கள் - பலர் பலர் பாராட்ட நிகழ்த்தி வருகின்றனர்.

இம்முறையில் திருமணம் செய்தவர்கள் பற்பல வெளிநாடுகளிலும் சிறக்க வாழ்கின்றனர். இப்பயிற்சியைக் குறுவட்டாக்கித் தாமும் செய்யும் பணி மேற்கொண்டுளர்.

சிவனிய மாலிய 'அருட் சுனைஞர்' பட்டயப் படிப்பைத் துணைவேந்தர் முனைவர் திருத்தகு **மூ. பொன்னவைக்கோ** அவர்கள் திருச்சிராப்பள்ளி, பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் தொடங்கிக், கோயில் வழிபாடு, குடமுழுக்கு, குடும்பச் சடங்கு ஆகியவை தமிழில் நிகழ்த்த வழிவகுத்தார்.

இதே படிப்பை இப்பொழுது சென்னை காட்டாங்குளத்தூர் திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக் கழகத்தில் பட்டயப் படிப்பாக்கிப் பயிற்சி தொடர்கின்றது. நூற்றுவர்க்குமேல் பயில்கின்றனர். 'சால்பியப் பயிற்சி' யான் தந்து, திருமணம் முதலிய குடும்பக் கரணங்கள் (சடங்குகள்) நிகழ்த்தத் துணையாகின்ற பேறு பெறுகின்றேன்.

இம் மீட்டெடுப்பு வேலை பலப்பலரால் செய்யப்படுதல் ஒரு விடிவை ஏற்படுத்தவே செய்யும்! விழி திறப்பார்க்குத் தானே விடிவு உண்டாகும்! அது தமிழுணர்வாளர் கிளர்ந்து பெருகுதலால் தான் இயலும்.

**"மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்**
**நன்கலம் நன்மக்கட் பேறு"**

வாழிய நலனே! வாழிய நிலனே!

❖❖❖

**திருமணத்திற்கு வேண்டும் பொருள்கள்**

1. மணமாலை 2
2. துணைமாலை 2
3. பெற்றோர்களுக்கு மாலை 4
4. வாய்த்தால் வள்ளுவர் சிலை (அ) படம்.
5. உதிரிப்பூ 2 அல்லது 3 தட்டங்கள்.
6. விளக்கு ஒன்று. எண்ணெய் திரியிட்டு ஏற்றும் வகையில் மெழுகுதிரி - தீப்பெட்டி வைத்திருத்தல்
7. நிலை ஒலிவாங்கி வைத்தல்.

**மண மேடை**

மணமக்களை மண இருக்கையில் அமர்த்துதல். மணமகனுக்கு வலப்பால் மணமகளும், மணமகளுக்கு இடப்பால் மணமகனும் மண மாலையொடும் இருக்கச் செய்தல்.

தலைவர் - முன்னிலையர் - கரணம் நடத்துபவர் - வாழ்த்துநர் - ஆயோரை மேடைக்கு அழைத்து அமரச் செய்தல்.

மணமக்களின் பெற்றோர்களை மேடையில் அமரச் செய்தல்.

வரவேற்புரைத்து, இம் மங்கல விழாவை இவர் நடத்துவார் என அறிவித்தல். மணவிழா நடாத்துநர் அவையோரை வணங்கி அவர்கள் சார்பில் மணம் நிகழ்த்துவதாகக் கூறித் தொடங்குதல்.

**நிகழ்முறை விளக்கம்**

**1. மொழி வாழ்த்து - இயற்கை வாழ்த்து**

**2. உலக வாழ்த்து.**

நம்நலம் என்பது உலக நலத்தைப் பொறுத்தே உள்ளது. நம்மால் உலகமும் உலகால் நாமும் நலமாக வாழ வேண்டும்

என்பதை விளக்கி, "உலகம் வாழ்க! உயர்வெலாம் வாழ்க" என மணமக்கள் வாழச் சொல்லுதல்

3. உலகில் வாழும் முறை வழங்கிய **வள்ளுவ வாழ்த்து.**

அறத்தால் பொருள் தேடி அப்பொருளால் இன்புற்று வாழவும்,

அமிழ்த நிலையமாகவும், கற்பக நிலையமாகவும்,
வான்மழைப் பேறாகவும் இணைப் புறாக்கள் எனவும்

வாழக் கூறி, "வள்ளுவம் வாழ்க வாழ்வியல் வாழ்க" என மண மக்கள் வாழ்வமைய வாழ்த்துதல்.

4. மணவிழாவுக்கு வந்துள்ள தாய்மார், சான்றோர், அன்பு நண்பு, சுற்றம் சூழல் எல்லாம் திருமணச் சான்றாம் சான்றோர்கள். இவர்கள் வாழ்த்தால் நாங்கள் என்றும் இனிது வாழ்வோம் எனச் **சான்றோரை** வணங்கிச் 'சான்றோர் வாழ்க சால்புகள் வாழ்க' என வாழ்த்தி எங்களை அவர்கள் வாழ்த்துமாறு வேண்டுகிறோம் என்று மணமக்களைச் சொல்ல வைத்துச், சான்றோர்கள் அனைவரையும்

"மணமக்கள் வாழ்க வாழ்க"

என மும்முறை வாழ்த்துமாறு கூறுதல்.

**4. பெற்றோர் வாழ்த்து**

தாய் தந்தையரைப் பேணல் மக்கள் தலைக்கடன் என்றவர் ஔவை. அந்நெறி முதியோரைப் பேணும் முறையாகும். அம்முறை போற்றாமையால் முதியோர் இல்லங்களையும் ஏதிலியர் இல்லங்களையும் நாடுமாறான நிலை நாட்டில் உண்டாயிற்று. நாங்கள் எங்கள் பெற்றோரை மீள் இளமையராகப் பேணும் பேறு பெறுவோம் என்பதன் அடையாளமே பெற்றோர் வழிபாடு. எங்களை மாலையொடு மணமக்களாக்கிய எங்கள் பெற்றோர்களுக்கு நாங்கள் மாலை சூட்டி மகிழ்கிறோம் என்று, மணமக்கள் அவரவர் பெற்றோர்க்கு மாலை சூட்டி வணங்கல். அவர்கள் மலர் தூவி

மணமக்களை வாழ்த்துதல். "பெற்றோர் வாழ்க பெருந்தகை வாழ்க" என மணமக்கள் போற்றல்.

"எங்கள் கண்ணே கண்ணின் மணியே; எங்கள் வாழ்வே வளமே வாழ்க" வெனப் பெற்றோர்கள் பிள்ளைகளை வாழ்த்த வைத்தல்.

**5. தாய் மார்களில் பங்களிப்பு**

முதிய சில தாய்மார்களை அழைத்துத் திருமங்கல நாணை வழிபட்டுத் தரச் செய்தல். இது தாய் நாடு; மொழி தாய் மொழி; தெய்வம் தாய்த் தெய்வம்; சொத்து தாயம். முன்னாளில் தாய்மாரே நடத்திய சடங்கினை ஆண்கள் எடுத்துக் கொண்டனர். அவர்களிடமிருந்து அயலார் பறித்துக் கொண்டனர். அதன் மீட்டெடுப்பு இஃதென விளக்கம் தந்து, தாய்மார் வணங்கிய தாலியை மணமகன் தாயும் மணமகள் தாயும் எடுத்து, மணமகன் கையில் தந்து மணமகளுக்கு அணிவிக்கச் செய்தல். கெட்டி மேளம் கொட்டல். மங்கல இசையே இவர்கள் செவியில் என்றும் விழட்டும் என்னும் அதன் உள்ளீட்டை விளக்கல்.

**6. மாலை மாற்று :**

மணமக்கள் இருவரும் நாம் இனி ஒருவர்; நீ வேறு நான் வேறு இல்லை; இணைமாலை போன்றவரானோம். என்பதன் அடையாளமாகத் துணை கொண்டு மாலை மாற்று மும்முறை நடத்துதல்.

**7. இடமாற்று :**

என் வீடு உன் வீடு; உன் வாழ்வு என் வாழ்வு; உன் உறவு என் உறவு எனவேறுபாடு இனி இல்லை. இனி, நம் வீடு நம் வாழ்வு நம் உறவு என்பதன் அடையாளமாக மணமக்கள் இடமாறி அமர்தல்.

**8. விளக்கேற்றல் :**

இல்லுறை தெய்வ வழிபாடாகக் குடும்ப விளக்கு ஏற்றுதல் - மணமக்கள் இருவரும் இணைந்து விளக்கேற்றல். ஒளி வாழ்த்துக் கூறல்.

**9. வாழ்த்து :**

குடும்ப வாழ்வு சிறக்க வாழ்த்துதல்:

இரட்டைக் கிளவிபோல் பிரியா வாழ்வினராக வாழச் செய்தல் (படபட, மடமட - இரட்டைச் சொல்) "ஆண் மரம்; பெண் வேர்" என வாழ்தல் - இவற்றை விளக்கல்-

மணிவிழாக் காலத்திலும்,

**"நிழலின் நீங்கா என் வெய்யோள்"** எனக் கணவனும், **"வதுவை நாளினும் இனியன்"**என மனைவியும் சிறப்புற வாழ்தல் என்பவற்றை விளக்கல்.

**10. பிறர் வாழ்த்து :**

வாழ்த்துவோரைச் சுருக்கமாக வாழ்த்தச் சொல்லல்.

**11. மக்கள் மலர்தூவல் :**

அவையின் ஊடே மணமக்கள் செல்ல, தட்டத்தில் உள்ள மலரைக் கொடுத்து அவையோர் மணமக்கள் மீது தூவச் செய்தல். அதன் நிறைவில் மீளவும் மேடைக்கு வந்து அமர்தல்; பரிசு வழங்குதல்; நன்றி கூறல்; விருந்துண்ணல்.

**12. விருந்தோம்பல்** என மணவிழாவை நிறைவித்தல் :

இடம் காலம் சூழலுக்குத்தக மணவிழா நடத்துதல். பெற்றோருள் எவரேனும் இலரென்றால் "நேரில் வாழ்பவர் நெஞ்சில் வாழ்பவர்" என இருப்பாராகக் கொண்டு நிகழ்த்துதல். காலம் கருதிச் சுருக்கியும் பெருக்கியும் உரிய பொழுதளவுள் நிறை வேற்றல்.

❖❖❖

**மணமக்களுக்கு வாழ்த்து** (பொது)

மங்கையைப் பாகம் ஏற்கும்
மாண்புறு நண்ப வாழி!
பொங்கிய புதுமை வாழ்வில்
புகுதரும் அன்ப வாழி!
தங்கிய நேர்மை மல்கித்
தகவுளோர் புகழ நாளும்
மங்கலம் பொலிந்து வாழி!
மனையறம் சிறந்து வாழி!

**இணைப்பு - 1**

**தமிழ்முறைத் திருமணம் நடைபெறும் முறை**

1. வரவேற்பு
2. மொழிவாழ்த்து
3. உலக நலவாழ்த்து
4. அவையினர்க்கு வாழ்த்து
5. பெற்றோர் வழிபடு - மாலைசூட்டடல் - மலர் தூவி வாழ்த்துதல்
6. மகளிர் மங்கல நாண் தொட்டு வணங்கல் - மணமக்களின் தாய்மார்கள் மங்கல நாணை மணமகன் கையில் தந்து திருப்பூட்டச் செய்தல்.
7. மாலை மாற்று
8. இடம் மாறி அமர்தல்
9. குடும்ப விளக்கு ஏற்றுதல்
10. வாழ்த்துரை.
11. உதிரிப்பூத் தட்டுகள் முன் செல்ல - மணமக்கள் அவையின் ஊடு செல்லுதல். அவையோர் மலர் தூவல்
12. நன்றி கூறுதல்; விருந்தோம்பல்.

*மொத்தம் அரை மணிநேரம்.*

# தமிழ் முறைத் திருமணம்
# தொடர்புக்கு

பெரும் புலவர். **மு. படிக்கராமு**
*"அறிவகம்"*
*31, இராம்நகர்,*
*ரோசுமேரி பள்ளி அருகில்,*
*மகாராச நகர் (அஞ்சல்)*
*திருநெல்வேலி - 11*
*பேசி : 0462 - 2532755*

முனைவர் **கு. திருமாறன்**
*672, பெரியார் சாலை*
*கருணாநிதி நகர்,*
*திருச்சிராப்பள்ளி - 620 021*
*கைப்பேசி : 94439 95657*

புலவர், முனைவர் **பி. தமிழகன்**
*2, பிச்சையம்மாள் நகர்,*
*காசாமலை,*
*திருச்சிராப்பள்ளி - 620 023*
*கைப்பேசி : 99407 04702*

புலவர் **ப. இராமதாசு**
*42, ஆசிரியர் குடியிருப்பு,*
*சமயபுரம்,*
*திருச்சிராப்பள்ளி மாவட்டம் - 621 112*
*கைப்பேசி : 9443302159*



The Printing House,Try-23.Ph:2420121